திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நிறைய சாகுபடி இடங்கள் உள்ளன. 50 சத விகிதத்திற்கு மேலாக பூம்புகார் தொகுதியிலே கரும்பு சாகுபடி செய்யப்பட்டுவருகின்றன. தலைஞாயிறு கூட்டுறவு சர்க்கரை ஆலை 40 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிறது. அதைப்போல வடபாதிமங்கலம் ஆலை 60 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிறது. ஆகவே பூம்புகார் தொகுதியில், தொழிலே இல்லாத அந்தத் தொகுதியில், அவசியம் கண்டிப்பாக நம் தொழில் அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவி இதய தெய்வம் ஆட்சியிலேவருகின்ற ஆண்டிலேயாவது ஒரு கரும்பு ஆலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் பகுதி ஒரு கடலோரப் பகுதி. இப்பகுதி மணல் பாங்கானது. அங்கே நிலத்தடி நீர் உப்புத் தண்ணீர் கொண்டதாக இருக்கிறது. கரும்பு அதிகம் சாகுபடி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. மேலும் தஞ்சை, நாகை ஆகிய மாவட்டங்களில் உணவு உற்பத்தியை முக்கிய நோக்கத்துடன் கொண்டு நெல் சாகுபடிக்கு அரசு முக்கியத்துவம் கொடுக்கிறது. எனவே கரும்பு சாகுபடிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க இயலாது. மேலும் 40 கிலோ மீட்டர் தூரம் சென்றுதான் தலைஞாயிறுக்கு சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகத்தான் தமிழ்நாடு அரசு தூரமாக இருந்து கரும்பு எடுப்போருக்கு வாடகையையும் ஆலை ஏற்றுக்கொள்கின்ற காரணத்தினாலே அந்த பிரச்சினை எழுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே பூம்புகார் பகுதியிலே சாகுபடி செய்கின்ற கரும்புகளை தலைஞாயிறு சர்க்கரை ஆலைக்கோ அல்லது ஆரூரான் சர்க்கரை ஆலைக்கோ அனுப்புவதில் எந்தவிதமான சிரமமும் இருக்காது. அதற்குண்டான முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆக இந்த அளவோடு நம்முடைய பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மன நிறைவு கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 494, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை. திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

494—

வன விலங்குகளால் அபாயம் நேரிடும்போது இழப்பீட்டுத் தொகை வழங்குதல்.

* 14612—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS

வன விலங்குகளால் அபாயம் நேரிடும் மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வன விலங்குகளால் மனிதர்களுக்கு உயிர்ச் சேதமோ, காயமோ அல்லது கால்நடைகளுக்குச் சேதமோ, பயிர்ச் சேதமோ ஏற்பட்டால் அதன் தொடர்பாக வரும் கோரிக்கைகளின் மேல் வனத்துறைத் தலைவர் (வன உயிரினம்) அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு இழப்பீட்டுத் தொகை இதுகாறும் வழங்கி வரப் படுகிறது. இறந்துவிட்ட கால்நடையின் மதிப்பில் 50 சத விகிதம் அல்லது ரூ. 500 இதில் எந்தத் தொகை குறைவாக உள்ளதோ அந்தத் தொகை இழப்பீடாக அளிக்கப்பட்டு வரு கிறது.

முற்பகல் 10-55

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதருள் மாணிக்கமாகத் திகழும் எங்களது இதய தெய்வத்தின்பொற்கால ஆட்சியில் தளவாடி, குன்றி மலைப் பகுதி களில் எல்லாம் மலைவாழ் மக்கள் அவர்கள் வீட்டுக்குப் பொருள் களை வாங்க நடந்தே வந்து கீழே சத்தியமங்கலம் வருவதாக இருந்தாலும், சில இடங்களில் குன்று பகுதிகளில் பஸ் போக்கு வரத்து இல்லாமல் இருக்கிறது. அந்த மாதிரி சூழ்நிலையில் அவர்கள் வருகை புரியும்பொழுது காட்டு யானைகளால் துரத்திக் கொல்லப்படுகின்றார்கள். நிறையபேர் இதுவரையிலும் பல இடங்களில் அது தனி நபராக வரும்போது ஒற்றை யானை வந்தால் அந்த நபரை எப்படியும் கொன்றுவிடுகிறது. அப்படிப் பட்ட சூழ்நிலையில் அவர் தலைப் பாதுகாத்துக்கொள்ள துப்பாக்கி உரிமம் வழங்கப்படுமா என அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் மூலம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டு யானைகள் மற்றவர்களைத் தாக் காத அளவு பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை எல்லாம் வனத்துறை செய்து வருகிறது. எனவே, தனியாருக்கு துப்பாக்கி லைசன்ஸ் வழங்குகிற ஒரு செயற்குறிப்பு இந்த அரசினுடைய எண்ணத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 495, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்,